Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம் ஹு நவம்பர் மீ 7௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 34

## ரஷ்யாவின் மூன்று 'சப்ளை' வழிகள்

### ஆர்க்கேஞ்சல் துறை முகத்தின் உபயோகம்

### பனிக்கட்டியை உடைத்து ஏற்படுத்தப்பட்ட கடல்வழி

### ரஷ்யாவுக்கு அனுப்பப்படும் தீவிரமான யுத்த சாமான் உதவி

ரஷ்யாவில் நடக்கும் யுத்தம் ஒரு நெருக்கடியான நிலைமையை அடைந்திருக்கிறது. ஜெர்மானியர்கள் ஏராளமான துருப்புகளை அனுப்பிக்கொண்டு இருக்கிறார்கள். ஜெர்மன் துருப்புகள் கணக்கில்லாமல் சேதமடைகின்றன. இருந்தபோதிலும், நெருக்கடியான நிலைமைக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட 'ரிசர்வ்' பட்டாளங்களை ஜெர்மனி ரஷ்யப் போர் முனைக்கு அனுப்பிக் கொண்டேயிருக்கிறது. ஜெர்மானியர்கள் முன்னேறிச் சென்று புதிய பிரதேசங்களைப் பிடித்தாலும், மழைக்காலம் வருவதற்குள் ரஷ்யாவின் எதிர்ப்பை ஒடுக்கிவிட முடியாது என்று சொல்லலாம். கடுமையான மழைக்காலம் வந்து விட்டால், ஜெர்மனிக்கு இப்போதிருப்பதைவிட கஷ்டங்கள் அதிகமாகும். ஜெர்மன் துருப்புகள் மழைக் காலத்தில் ஒதுங்குவதற்கு இடம் வேண்டும்; கடுங் குளிரைத் தாங்குவதற்கு கம்பளிகள், போர்வைகள், முதலியன வேண்டும்; உணவுப் பொருள்கள் முதலியன அதிக தூரத்திலிருந்து கொண்டு வரவேண்டும்; இதற்குப் போக்கு வரவு சாதனங்கள் சரியாக வேலை செய்ய வேண்டும்; வேலை செய்தாலும், ரஷ்யாவின் சில்லரைப் பட்டாளங்களால் தாக்கப்படாமல் இருக்க வேண்டும்; இந்த சௌகரியங்களெல்லாம் வைத்துக் கொண்டு 1,700 மைல் தூரம் நீளமான போர் முனையில் ஜெர்மன் துருப்புகள் சண்டை போட வேண்டும்.

ஜெர்மனிக்கு இப்படி பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால் ரஷ்யாவின் தற்கால நிலைமையை நாம் கவனிக்கவேண்டியது அவசியம். ரஷ்யாவுக்கும் ஏராளமான சேதம் ஏற்பட்டிருக்கிறது. ரஷ்யத் துருப்புகளும், யுத்த தளவாடங்களும், அதிக நஷ்டமாயிருக்கின்றன. ரஷ்யாவினுடைய முக்கியமான தொழிற்சாலைப் பிரதேசங்களில் சில ஜெர்மனியால் பிடிக்கப்பட்டன. மாஸ்கோ பிரதேசத்திலும், டோனெட்ஸ் பிரதேசத்திலும் உள்ள தொழிற்சாலை இடங்கள் கைப்பற்றப்பட்டால் அந்த இடங்களிலிருந்து உற்பத்திசெய்து இனிமேல் சாமான்கள் அனுப்புவதற்கு முடியாது. அந்த இடங்களை ஜெர்மனி பிடித்துவிடுவதால் பெரிய லாபம் அடைந்துவிடுவதாகவும் சொல்லிவிடுவதற்கில்லை. ஏனென்றால், ரஷ்யர்கள் வெளியேறுவதற்குமுன், தொழிற்சாலைகளை அழித்து நாசம்செய்துவிட்டுத்தான் போவார்கள். ஆனால் ரஷ்யாவின் யுத்த ஆயுத உற்பத்தி இதனால் குறைகிறதென்ற விஷயத்தை நாம் கவனிக்கவேண்டும்.

### வசந்தகாலம் வருவதற்குள்

ரஷ்யாவின் ஆயுதபலம் குறைந்தால், அதனுடைய யுத்த பலம் குறைந்துவிடுகிறது. ஆகையால் இந்தக் குறைவை நீக்கிவிடவேண்டும். இது அமெரிக்காவாலும், பிரிட்டனாலும்தான் செய்யமுடியும். இந்த இரண்டு பெரிய வல்லரசுகளும் ஏராளமான யுத்த தளவாடங்களையும், ஆயுதங்களையும், இதர உதவிகளையும் ரஷ்யாவுக்கு அனுப்பவேண்டும். அப்போது ரஷ்யா தன்னுடைய நஷ்டங்களை சரிக்கட்டிக்கொள்ளுவதற்கு சௌகரியமாயிருக்கும். மழைக்காலம் முடிந்து, வசந்தகாலம் வருவதற்குள், ரஷ்யத் தளகர்த்தர்களாகிய மார்ஷல் வாரஷிலோவும், மார்ஷல் புடியானியும் தங்களுடைய பட்டாளங்களை நேசதேசத்தார்களின் உதவியால் சீர்திருத்தி, ஒழுங்குபடுத்துவதற்கு அனுகூலமாயிருக்கும்.

இந்த அனுகூலமான நிலைமை ஏற்படுவதற்கு எவ்வளவுகாலம் பிடிக்கும்? அதற்காக என்னென்ன செய்யவேண்டும்? இப்போதுள்ள நெருக்கடியான நிலைமை ரஷ்யர்களுக்கு ஒருவேளை தீமையாக முடிந்தால், பின், வால்கா ஆறுகள் ஓரம் ரஷ்யத்துருப்புகள் சென்று தங்களுடைய பாதுகாப்புகளைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டும். கிழக்கே, அதிக தூரத்தில் கொண்டுபோய் வைக்கப்பட்ட தொழிற்சாலைகளும், கிழக்குப் பிரதேசத்தில் கிடைக்கும் மூலப்பொருள்களும், இதற்கு மிகவும் உதவியாயிருக்கும். ஆனால், ரஷ்யப் பட்டாளங்கள் தங்களை பலப்படுத்திக்கொண்டு, சகல யுத்த முஸ்தீப்புகளுடன் முதல் தரமான பட்டாளங்களாக விளங்குவதற்கு பன்னிரண்டு மாதங்களாகும் என்று யுத்த நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். இதனால் யாதொரு பிரயோசனமுமில்லை. பன்னிரண்டு மாத காலத்தை குறைந்த பட்சம் ஆறு மாதமாகவாவது குறைத்தால்தான் நல்லது. இதற்கு அமெரிக்காவும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும் உதவிசெய்யவேண்டும். ரஷ்யாவுக்கு உதவி செய்வதில் தவறக்கூடாது; அவைகள் தவறப்போவதில்லை. ஆனால் அதிக தீவிரமான யுத்த உதவிசெய்யவேண்டும். எவ்வளவு அதிகமாக ரஷ்யாவுக்கு உதவி அனுப்பமுடியுமோ, அவ்வளவும் செய்தாகவேண்டும்.

### 'சப்ளை' வழிகள்.

இப்போது, ரஷ்யாவுக்கு யுத்த சாமான்கள் செல்லும் பாதைகள் இதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டு பலமாக்கப்பட்டிருக்கின்றன. இந்த 'சப்ளை' பாதைகள் மூன்றாகும். அவையாவன:—

(1) பாரசீகக் குடாக்கடலிலிருந்து அல்லது பலுசிஸ்தானத்திலிருந்து, இரான் வழியாக காஸ்பியன் கடல் அல்லது காகசஸ் பிரதேசத்துக்குச் செல்லும் பாதை;

(2) வட அமெரிக்காவில் பசிபிக் கடலோரத்திலிருந்து ரஷ்யாவின் கிழக்குத்துறைமுகமாகிய விலாடிவாஸ்டாக்குக்குப் போகும் வழி;

(3) வட அமெரிக்காவில் போஸ்டன் அல்லது வேறு சௌகரியமான துறைமுகத்திலிருந்து, அட்லாண்டிக் கடல்வழியாக, ஐஸ்லாந்து பக்கமாகச் சென்று, ரஷ்யாவின் வடமேற்குத் துறைமுகமாகிய ஆர்க்கேஞ்சலுக்குச் செல்லும் பாதை.

இரானில் இப்போது புதிதாக ரோட்டுகள் போடப்படுகின்றன. இரானுடைய பெரிய ரயில்பாதை திட்டம் விசாலப்படுத்தப்பட்டது. ஒரே நாளில் 3,000 டன் சாமான்கள் அனுப்புவதற்கு இப்போது சவுகரியம் இருக்கிறது. பர்மா ரோட்டு வழியாக சீனாவுக்கு ஒரு நாளில் 400 டன் சாமான்கள்தான் போக முடியும். இதனால் ரஷ்யாவுக்குச் செல்லும் இரான் பாதையின் உயர்ந்த தன்மை நன்றாகத் தெரிகிறது. இரானைத் தாண்டிச் செல்லும் பெரிய ரயில்பாதை 868 மைல் நீளமுள்ளது. பாரசீகக் குடாக்கடல் ஓரத்தில் இருக்கும் பந்தார் ஷாப்பூர் என்ற இடத்தில் இந்த ரயில்பாதை ஆரம்பித்து, காஸ்பியன் கடல் ஓரத்தில் இருக்கும் பந்தார்ஷா என்ற இடத்தில் முடிகிறது. டெஹரான் என்பது இரானுடைய தலைநகரம்; அது இந்த ரயில் பாதை வழியில் இருக்கிறது. டெஹரானிலிருந்து வட மேற்கில் சஞ்சான் என்ற ஊர் வரைக்கும் ஒரு கிளை ரயில் பாதை

போகிறது. இதை, ரஷ்ய எல்லையிலிருந்து தப்ரீஸ் என்ற ஊருக்குச் செல்லும் ரயில்பாதையோடு சேர்க்கப் போகிருர்கள். வடகிழக்கில், மற்றெரு கிளை ரயில் பாதை கட்டப்படுகிறது. அது மெஷித் என்ற இடத்துக்குப் போய், பிறகு ஆப்கனிஸ்தானத்தின் எல்லையோரத்தில் இருக்கும் குஷ்க் என்ற ரஷ்ய பட்டணத்துக்குச் செல்லும்.

### இந்திய சாமான்கள்,

இந்தியாவின் வடமேற்கில் உள்ள பட்டணமாகிய குவெட்டாவிலிருந்து மற்றெரு தரை வழி போகிறது. அதையும் சீக்கிரமாக பலப்படுத்திக்கொண்டு இருக்கிருர்கள். கராச்சி துறைமுகத்திலிருந்தும், கராச்சி-குவெட்டா ரயில்வேயிலிருந்தும், இந்தியாவிலுள்ள இதர 'சப்ளை' பட்டணங்களிலிருந்தும் வரும் யுத்த சாமான்கள் முதலியன இந்த வழியாக ரஷ்யாவுக்கு அனுப்பப்படுகின்றன.

ரஷ்யாவுக்குச் சாமான்கள் செல்லும் வழியை செம்மைபடுத்துவதற்காக, பிரிட்டிஷ் ரயில்வே இஞ்சினீயர்கள் இரானில் வேலைசெய்து வருகிருர்கள். பிரிட்டனிலிருந்து ஏராளமான ரயில் வண்டிகள் இரானுக்குக் கடல் வழியாக அனுப்பப்படுகின்றன. அமெரிக்காவிலிருந்தும் சில நிபுணர்கள் மேற்பார்வை செய்துவருகிருர்கள். இரானிய ரோட்டுகள் வழியாகவும் இரானிய ரயில்வேக்கள் மூலமாகவும் ரஷ்யாவுக்கு சாமான் 'சப்ளை' கள் செல்வதை அவர்கள் தணிக்கை பார்க்கிருர்கள்.

அமெரிக்கா, பிலிப்பைன் தீவுகள், டச்சுக் கிழக்கிந்திய தீவுகள் இவைகளிலிருந்து ரஷ்யாவின் கிழக்குத் துறைமுகமாகிய விலாடிவாஸ்டாக்குக்கு யுத்த சாமான் 'சப்ளை' கள் போய்க்கொண்டிருக்கின்றன. விலாடிவாஸ்டாக்கிலிருந்து ரயில் மார்க்கமாக சைபீரியாவைக் கடந்து மாஸ்கோவுக்கும் இதர போர் முனைகளுக்கும் சாமான்கள் செல்கின்றன. விலாடிவாஸ்டாக் வழியாக சாமான்கள் போகக்கூடாது என்று ஜப்பான் ஆட்சேபனை செய்தது. ஜப்பானுடைய மிரட்டலுக்குத் தான் பயப்படப்போவதில்லை என்று ரஷ்யா ஜப்பானை எச்சரிக்கை செய்தது. இருந்தபோதிலும் இப்போது அமெரிக்காவிலிருந்து வரும் 'சப்ளை' சாமான்களில் பெரும்பாலும் போஸ்டனிலிருந்து ரஷ்யாவின் வடக்குத் துறைமுகமாகிய ஆர்க்கேஞ்சலுக்கு அனுப்பப்படுகின்றன. ஏனென்ருல் இந்தக் கடல் வழிதான் ரஷ்ய யுத்த முனைக்குக் குறுகிய வழி. இதல்லாமல் அமெரிக்காவின் முக்கியமான தொழிற்சாலைகள் எல்லாம் கிழக்கில் அட்லாண்டிக் கடலோரப் பிரதேசத்தில் இருக்கின்றன. விலாடிவாஸ்டாக்குக்கு சாமான்கள் அனுப்புவதைவிட ஆர்க்கேஞ்சலுக்கு அனுப்புவதுதான் மிகவும் சௌகரியமானது.

### சௌகரியமான துறைமுகம்

அமெரிக்காவின் மேற்குத் துறைமுகமாகிய சான் பிரான்சிஸ்கோவிலிருந்து ரஷ்ய கிழக்குத் துறைமுகமாகிய விலாடிவாஸ்டாக்குக்கு சுமார் 5,000 மைல் தூரம் இருக்கிறது. அமெரிக்காவின் கிழக்குத் துறைமுகமாகிய போஸ்டன் அல்லது நியூயார்க்கிலிருந்து, ரஷ்ய வடக்குத் துறைமுகமாகிய ஆர்க்கேஞ்சலுக்கும் அதே தூரம்தான் இருக்கிறது. ஆனுல், ஆர்க்கேஞ்சல் துறைமுகம்தான் இந்த நிலைமையில் சௌகரியமானது. கிழக்குப் பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலைப் பொருள்களை அட்லாண்டிக் துறைமுகங்களிலிருந்து ஆர்க்கேஞ்சலுக்கு அனுப்புவது சுலபம். ரஷ்யாவும் ஆர்க்கேஞ்சலிலிருந்து தெற்கு நோக்கிவரும் ரயில் பாதையை உபயோகிப்பதற்கு அனுகூலமாயிருக்கிறது. விலாடிவாஸ்டாக்கிலிருந்து சாமான்கள் கொண்டுவருவதைவிட, ஆர்க்கேஞ்சலிலிருந்து சாமான்கள் கொண்டுவருவது ரஷ்யாவுக்கு சௌகரியமான காரியம்.

ஆனுல், ஆர்க்கேஞ்சலில் ஒரு கஷ்டம் இருக்கிறது. மழைக்காலத்தில் துறைமுகம் பனிக்கட்டிமயமாய் இருக்கும். ரஷ்யா இந்த கஷ்டத்தை நீக்குவதற்காக பனிக்கட்டி உடைக்கும் கப்பல்கள் மூன்றை அங்கே வைத்திருக்கிறது. ஒவ்வொன்றும் 12,000 டன் எடையுள்ளது. இந்தக்கப்பல்கள் பனிக்கட்டியை உடைத்து, கடல் பாதையை ஒழுங்குபடுத்தி வைத்திருக்கும். நவம்பர் மாதத்திலிருந்து மே மாதம் வரைக்கும் இக்கப்பல்கள் பனிக்கட்டி உடைக்கும் வேலையைச் செய்துகொண்டுவரும். மழைக்காலம் முழுவதும் ஆர்க்கேஞ்சலிலிருந்து வரும் ரயில் பாதையைச் சரியாக பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற தைரியம் ரஷ்ய அரசாங்கத்துக்கு உண்டு.

### ஜனநாயக நாடுகளின் உதவி.

விலாடிவாஸ்டாக்குக்கு ஜப்பான் கரையோரமாக, யுத்த சாமான்கள் கொண்டுபோகக்கூடாது என்று ஜப்பான் ஆட்சேபித்ததல்லவா? ஆனுல் ஆர்க்கேஞ்சலுக்கு சாமான்கள் போவதை ஜப்பான் ஆட்சேபிக்க முடியாது. ஆர்க்கேஞ்சல் வழி பல விதங்களில் ரஷ்யாவுக்கு அனுகூலமானது. ஆர்டிக் கடலையும், ஆறுகளையும் போக்குவரத்து சௌகரியங்களுக்கு உபயோகமாய் இருப்பதற்காகச் செய்யும்படியான பொறுப்பு ஒரு கமிட்டிக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டி தன்னுடைய பொருப்பை மிக நன்ருகச் செய்துவருகிறது என்று வெளிநாட்டுக் கப்பல்களின் 'கேப்டன்' கள் கூறுகிருர்கள். பிலிப்பைன் தீவுகள், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, டச்சு கிழக்கிந்தியா தீவுகள் இவைகளிலிருந்து ஆர்டிக்கடல் வழியாக ஆர்க்கேஞ்சல் துறைமுகத்துக்கு சாமான்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. சமீபத்தில் பிரிட்டிஷ் கப்பல்கள் ஏராளமான யுத்த சாமான்களுடன் ஆர்க்கேஞ்சலுக்குப் போய்ச் சேர்ந்திருப்பதாக பின்லாந்து செய்திகளிலிருந்து தெரிகிறது. இதனுல் இந்த நெருக்கடியான சமயத்தில் ஜனநாயக நாடுகள் ரஷ்யாவுக்குத் தங்களாலான உதவியைச் செய்து வருகின்றன என்று நன்ருகத் தெரிகிறது. மாஸ்கோவில் நடந்த மூன்று வல்லரசுகள் மகாநாட்டில், பிரிட்டிஷ் தூது கோஷ்டியின் தலைவர் லார்டு பீவர் புருக்கும், அமெரிக்க தூதுக் கோஷ்டியின் தலைவர் மிஸ்டர் ஹாரிமனும், ரஷ்யத் தலைவர் மிஸ்டர் ஸ்டாலினுக்குக் கொடுத்த வாக்குறுதி பூரணமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

---

# இந்தியாவின் சுரங்கப் பொருள்கள்

## கிடைக்கும் இடங்களும், உபயோகமும்

### நிலக்கரி, இரும்பு: பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியா இரண்டாவது

[இந்தியாவில் சுரங்கப் பொருள்களின் உற்பத்தி சென்ற ஏழு வருஷங்களாக அதிகமாகிக்கொண்டே வருகிறது. அவைகளில் முக்கியமானவை: நிலக்கரி, இரும்பு, பெட்ரோலியம், கந்தகம், மைகா, மாங்கனீஸ், பாக்சை ஆகியவைகள். 1938-ம் வரு இந்தியாவில் பூமிக்கு உள்ளிருந்து வெட்டி எடுக்கப்பட்ட சுரங்கப்பொருள்களின் மதிப்பு சுமார் 34¼ கோடி ரூபாய். இந்த முக்கியமான பொருள்கள் அகப்படும் இடங்களும் அவைகளின் உபயோகங்களும், அவைகளினுல் இந்தியாவுக்கு உண்டாயிருக்கும் பெருமையும், இந்தக் கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது :—]

இந்தியாவின் பூமிக்கு உள்ளிருந்து பலவகையான பொருள்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன. அவைகளுக்கு சுரங்கப்பொருள்கள் அல்லது தாதுப்பொருள்கள் என்று பெயர். இவைகள் பூமிக்கு உள்ளிருந்தும் வெட்டி எடுக்கப்படுகின்றன; மலைகளிலிருந்தும் வெட்டி எடுக்கப்படுகின்றன. இவைகளுள் சில தாதுப்பொருள்களுக்கு நம்நாடு பேர்போனது. நிலக்கரி, இரும்பு உற்பத்தி செய்வதில் பிரிட்டிஷ சாம்ராஜ்ய நாடுகளில் இந்தியா இரண்டாவதாய் இருக்கிறது. நிலக்கரி, இரும்புக்கு அடுத்தபடியாக மாங்கனீஸ் தாதுப்பொருள் இருக்கின்றது. உலக முழுவதும் உற்பத்தியாகும் மாங்கனீஸ் தாதுப்பொருள்களில் முக்கால்பாகம் நம்நாட்டிலிருந்துதான் கிடைக்கிறது.

1898-ம் வருஷம் இந்தியாவில் கிடைத்த தாதுப் பொருள்களின் மதிப்பு 35 லக்ஷம் பவுனுகின்றது. 1938-ம் வருஷம் அவைகளின் மதிப்பு 330 லக்ஷம் பவுனுக்கு ஏறிவிட்டது; அதாவது, 34 கோடி ரூபாய்க்குமேல் உயர்ந்துவிட்டது. இதில் நிலக்கரியின் மதிப்பு $10\frac{1}{2}$ கோடி ரூபாய்க்குமேலாகின்றது.

## நிலக்கரி.

1939–40-ம் வருஷத்தில் நிலக்கரி உற்பத்தி $2\frac{1}{2}$ கோடி டன்கள். இதற்கு முன்வருஷம் $2\frac{3}{4}$ கோடி டன் எடுக்கப்பட்டது. இதனுல் வெளிநாடுகளுக்கு நிலக்கரி ஏற்றுமதி செய்வது குறைந்துவிடவில்லை. 1939–40-ல் நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு சுமார் 20 லட்சம் பவுன்கள் ஏற்றுமதியாயிற்று. இதன் மதிப்பு 189 லட்ச ரூபாய்.

நிலக்கரிச்சுரங்க வேலை நம் நாட்டில் முக்கியமான கைத்தொழிலாயிருக்கின்றது. இந்த சுரங்கங்களில் சுமார் 2 லட்சம் பேர் வேலை செய்கிருர்கள். நிலக்கரி உற்பத்தியில் இந்தியா உலகத்தில் ஒன்பதாவது நாடாயிருக்கின்றது.

நம் நாட்டில் உற்பத்தியாகும் நிலக்கரியில் மூன்றில் ஒரு பங்கு, நம்முடைய ரயில்வேக்களுக்கு செலவாகின்றது. 25 லட்சம் டன் இரும்பு, எஃகு, இந்திய கைத்தொழில்களுக்குச் செலவாகின்றது. வீடுகளில் செலவாகும் நிலக்கரி சுமார் 20 லட்சம் டன்கள்.

சென்ற மூன்று வருஷங்களாக, வெளிநாடுகளுக்கு நிலக்கரி ஏற்றுமதி அதிகமாயிருக்கின்றது. 1938-ல் வெளிநாடுகளுக்கு, முக்கியமாக பர்மா, சிலோன், தூரக்கிழக்கு நாடுகளுக்கு 13 லட்சம் டன்கள் ஏற்றுமதியாயிருக்கிறது.

நம் நாட்டில் பூமிக்கு அடியிலிருக்கும் நிலக்கரி சுமார் 6,000 கோடி டன்களிருக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில், 2,000 கோடி டன்கள் பூமி மட்டத்திற்கு 1,000 அடிக்குக் கீழிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. நல்ல நிலக்கரி பூமிக்குள் 2,000 அடி ஆழத்தில்தான் கிடைக்கும்.

நிலக்கரி கிடைக்கும் இடங்கள் :—வங்காளம், பீகார், மத்திய மாகாணங்கள், கிழக்கு சமஸ்தானங்கள், ஹைதராபாத் சமஸ்தானத்தில் சிங்கரேணி, அஸ்ஸாம், பலூசிஸ்தானம், மத்திய இந்தியா, ஒரிஸ்ஸா, பஞ்சாப், இராஜபுதனம். இந்திய நிலக்கரி உற்பத்தியில பத்தில் ஒன்பது மடங்கு வங்காளத்திலும், பீஹாரிலும் கிடைக்கிறது.

## இரும்பு.

பல நூறு வருஷங்களுக்கு முன்பே நம்நாடு இரும்பு கைத்தொழிலில் பேர்போனது. சிறந்த உருக்கு இரும்பு, இங்கே இருந்து மத்திய தரைக் கடல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு 'டமாஸ்கஸ்' கத்திகள் செய்வதற்காக உபயோகிக்கப்பட்டது.

டில்லியில் குதுப்மீனர் என்ற ஒரு பெரிய இரும்புத் தூண் இப்போதும் இருக்கிறது. அது இந்திய கைத்தொழிலின் சிறப்பைக் காட்டுகிறது. அதன் உயரம் : 23 அடி 8 அங்குலம் ; குறுக்களவு : ஒரு அடிக்கு மேலிருக்கும் ; எடை : 6 டன்கள் ; செய்யப்பட்ட காலம் : சுமார் 1526 வருஷங்களுக்கு முன்.

உலகத்தில் அதிக முக்கியமான இரும்பு தாதுப் பொருள்கள் பீகாரில் சிங்பம் ஜில்லாவிலும், கிழக்கு சமஸ்தானங்களிலும்; ஒரிஸ்ஸாவிலும், சேலத்திலும் கிடைக்கின்றன. மத்திய மாகாணத்தில் பஸ்டார் சமஸ்தானத்தில் சுமார் $72\frac{1}{2}$ கோடி டன் இரும்பு தாதுப் பொருள்களிருக்கின்றன. சண்டா, துர்க் ஜில்லாக்களில், இராஜ் ஹாரு மலைகளில் 25 லக்ஷம் டன்கள் இருககின்றன. தென் இந்தியாவில் மைசூர் சமஸ்தானத்தில் 1938-ம்௵ 35 000 டன்கள் வெட்டி எடுக்கப்பட்டன. 1938-ம்௵ இந்தியாவில் உற்பத்திசெய்த சுமார் $15\frac{1}{2}$ லட்சம் டன்களில் சுமார் $3\frac{1}{4}$ லட்சம் டன்கள் ஜப்பானுக்கும், $1\frac{1}{2}$ லட்சம் டன்கள் பிரிட்டனுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1939–40-ம்௵ சுமார் 18 லட்சம் டன்கள் வெட்டி எடுக்கப்பட்டன. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில், பிரிட்டனுக்கு அடுத்தபடியாக, இந்தியா, இரும்பு உற்பத்தியில் இரண்டாவதாக இருக்கின்றது.

## மாங்கனீஸ்

மாங்கனீஸ் தாதுப் பொருள், உலக உற்பத்தியில் மூன்றில் ஒரு பாகம் இந்தியாவில் கிடைக்கிறது. சென்னை இராஜதானியில் சாண்டூர் சமஸ்தானத்தில் ஒரு மாங்கனீஸ் மலை இருக்கிறது. இந்த மலையிலுள்ள மாங்கனீஸ் தாதுப் பொருள் உலகத்திலேயே சிறந்தது என்று சொல்லப்படுகிறது. இரும்பு, எஃகு கைத்தொழிலுக்கு மாங்கனீஸ் வேண்டியதாயிருக்கின்றது. 1938-ம் வருஷத்தில் $9\frac{1}{2}$ லட்சம் டன் மாங்கனீஸ் வெட்டி எடுக்கப்பட்டது. இதன் மதிப்பு ரூ. 388 லக்ஷம். இதில் 5 லட்சம் டன்கள் ஜப்பானுக்கும், பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்தியாவில் இரும்பு, எஃகு கைத்தொழிலுக்கு 60,000 டன் மாங்கனீஸ் வேண்டியதாயிருக்கிறது.

மத்திய மாகாணத்தில் பாலாகட், பந்தாரா, நாகப்பூர் ஜில்லாக்கள் ; சென்னை மாகாணத்தில் சாண்டூர் சமஸ்தானம் ; கிழக்கு சமஸ்தானங்கள் (கியோன்ஜார், போனை) பீகாரில் சிங்பம் ; பம்பாய் மாகாணத்தில் வட கன்னடம், பான்ச் மஹால் ஜில்லாக்கள் ; மைசூர் சமஸ்தானம்—இந்தப் பிரதேசங்களில் மாங்கனீஸ் கிடைக்கிறது.

## மைகா.

உலக மைகா உற்பத்தியில் முக்கால்வாசி நம் நாட்டில் கிடைக்கிறது. மைகா உற்பத்தியில் வேறு எந்த நாடும் நம் நாட்டிற்குச் சமானமில்லை. பீகாரில் ஹசாரிபாக்கிலும், நெல்லூர் ஜில்லாவில் கூடூரிலும், உள்ள பெண்மணிகளும், குழந்தைகளும், கூருன ஒரு ஆயுதத்தால் மைகாவை சுலபமாக பிரித்து எடுப்பதில் கைதேர்ந்தவர்கள். ஒரு அங்குலத்தை ஆயிரம் பாகமாகப் போட்டு அதில் ஒரு பாகம் எவ்வளவு மொத்தமாக இருக்குமோ அவ்வளவு மொத்தமாக இவர்கள் மைகாவைப் பிரித்தெடுக்கிருர்கள். வெளி நாடுகளில் இயந்திரங்களாலும் அவ்வளவு மெல்லியதாக எடுக்கமுடியாது. ஆகையால் மைகா அந்த நாடுகளிலிருந்து நம் நாட்டிற்குப் பிரிப்பதற்காகவே அனுப்பப்படுகிறது. இங்கு பிரிக்கப்பட்ட பிறகு மேல் நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறது.

1938-ம்௵த்தில் இந்தியாவிலிருந்து, பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும், ஜெர்மனிக்கும் மைகா அனுப்பப்பட்டது. அந்த வருஷத்தில் 42 லக்ஷ ரூபாய் மதிப்புள்ள மைகா உற்பத்தியாயிற்று.

மைகா நம் நாட்டில் அலங்காரம் செய்வதற்கும் மருந்துக்கும் உபயோகமாகின்றது. இதை காக்கா பொன் என்று கூறுவார்கள். வெளிநாடுகளில் மின்சார மூடிகள் (இன்சுலேடர்கள்) செய்வதற்கு உபயோகிக்கிருர்கள்.

பீகார், நெல்லூர் ஜில்லா, இராஜபுதனம், மைசூர், க்வாலியர், திருவாங்கூர் முதலிய இடங்களில் மைகா கிடைக்கிறது.

## பெட்ரோலியம்.

பெட்ரோலியம் உற்பத்தியில் பர்மா பேர்போனது. இந்தியாவிலும் உற்பத்தி அதிகமாகிக் கொண்டே வருகிறது. அஸ்ஸாமில் டிக்பாய் என்ற இடம், அட்டாக் ஜில்லா, பஞ்சாப், ராவல்பிண்டி ஆகிய இடங்களில் பெட்ரோலியம் கிடைக்கிறது.

1937-ம் வருஷத்தில் $7\frac{1}{2}$ கோடி காலன்களிலிருந்து 1938-ல் சுமார் $8\frac{3}{4}$ கோடி காலன்களுக்கு பெட்ரோலியம் உற்பத்தி உயர்ந்திருக்கின்றது. 1938-ல் பெட்ரோலியம் பஞ்சாபில் அட்டாக் எண்ணெய்க் கிணறுகளிலிருந்து 211 லக்ஷம் காலன்களும், அஸ்ஸாமில் 660 லக்ஷம் காலன்களும் உற்பத்தியாயிருக்கின்றது.

## பாக் சைட்.

பாக்சைட் என்பது ஒரு மாதிரியான களிமண். இதிலிருந்துதான் அலுமினியம் உண்டாகிறது. இது இந்தியாவில் பல இடங்களிலிருக்கிறது. முக்கியமான இடம் பம்பாய் நகரத்திற்கு 30 மைல் தூரத்திலுள்ள டங்கர்மலை. இங்கே 7,50,000 டன் கிடைக்கிறது. 1938-ம்௵ நம் நாட்டில் 4,634 டன் பாக்சைட் வெட்டி எடுக்கப்பட்டது. நம் நாட்டில் இதிலிருந்து அலுமினியம் பிரித்தெடுக்க தொழிற்சாலை இல்லாததனுல் இது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## க்ரோமைட்.

இது க்ரோமியம் என்ற உலோகமும் இரும்பும் கலந்த சுரங்கப் பொருள். மூன்று வருடங்களில் (1936–37–38-ல்) 52,000 டன் நம் நாட்டில் உற்பத்தியாயிருக்கிறது. கைத்தொழில் அடுப்புகளுக்கு உள்புரம் பூசினுல் அவைகள் சூடு தாங்கும். கிடைக்கும்

இடங்கள்: பலூசிஸ்தானம், பீகார், சென்னை மாகாணத்திலுள்ள கிழக்கு சமஸ்தானங்கள், பம்பாய், மைசூர் சமஸ்தானத்தில் ஷிமோகா, ஹஸ்ஸான் என்ற இடங்கள்.

### மாக்னிசைட்.

இதுவும் கைத் தொழிற்சாலை அடுப்புகளுக்கு உள்புரம் பூசுவதற்கு உபயோகிக்கப்படுகிறது. இது சேலத்திலும், மைசூரிலும் கிடைக்கிறது. இந்தியாவில் வருஷத்தில் உற்பத்தியாகும் 26,000 டன்களில் 2,500 டன்கள் மைசூரிலிருந்தும் மிச்சம் 23,500 டன்கள் சேலத்திலிருந்தும் கிடைக்கின்றன.

சேலம் ஜங்ஷனுக்கு 2 மைல் தூரத்தில் சுண்ணாம்புக் கரடு என்ற பிரதேசம் இருக்கிறது. இங்கு 4½ சதுர மைல் விஸ்தீர்ணத்தில் 140 அடி உயரமுள்ள பல கரடுகள் இருக்கின்றன. இங்கிருந்து வெட்டி எடுக்கப்பட்ட மாக்னிசைட் உலகத்திலேயே உயர்ந்ததாக இருக்கின்றது. ஆஸ்திரேலிய மாக்னிசைட் இதற்கு சமானமில்லை என்று சொல்லப்படுகிறது. சேலம் சுண்ணாம்பு கரட்டு வேலை 1902-லிருந்து ஆரம்பமாகி இன்னும் நடந்துகொண்டே இருக்கின்றது.

### ஜிப்சம்.

ஜிப்சம் என்பது பூமியில் இருக்கும் ஒருவகையான உப்பு. 70,000 டன் ஜிப்சம் ஒரு வருஷத்தில் இந்தியாவில் உற்பத்தியாகிறது. இது விசேஷ சிமெண்டுகள், வர்ணங்கள் முதலியவைகளுக்கு அதிகமாக உபயோகிக்கப்படுகிறது. விவசாயத்திலும் உபயோகிக்கப்படுகிறது.

கிடைக்கும் இடங்கள்:—திருச்சினாப்பள்ளி, பலூசிஸ்தானம், பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாகாணங்கள், பஞ்சாப், பிகானீர், ஜோத்பூர் சமஸ்தானங்கள்.

### கந்தகம்.

நம் நாட்டில் 500,000 டன் எடையுள்ள கந்தகம் பூமிக்குள் இருக்கின்றது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

உற்பத்தி இடங்கள்.—பலூசிஸ்தானம் (85,000 டன்கள்), சன்னி (300,000 டன்கள்), பீகார், சிம்லா மலைகளிலுள்ள சோலன் என்ற இடம், திருநெல்வேலி ஜில்லா.

# மதில்மேலிருக்கும் பூனை

## ஜப்பானின் தற்கால நிலைமை

### தூரக்கிழக்கு அரங்கத்தில் இந்திய பிரதம தளகர்த்தர்

ஜப்பான் மதில்மேலிருக்கும் பூனையைப்போல இருக்கிறது. என்ன செய்யப்போகிறது. எந்த தேசத்தைத் தாக்கப்போகிறது என்பதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஜப்பான் தெற்கு திசையை நோக்கி முன்னேறிச் செல்லுமா? வடக்கில் ரஷ்யாவைத் தாக்குமா? சீனாவுடன் நடத்தும் யுத்தத்தில் தன்னுடைய முழு கவனத்தைச் செலுத்தப் போகிறதா? அல்லது தாய்லாந்தின்மேல் படையெடுக்க நினைத்திருக்கிறதா? ஜப்பானுடைய உண்மையான நோக்கம் என்னவென்பது விளக்கமாகத் தெரியவில்லை. ஜப்பானுடைய துருப்புகள் சில சமயத்தில் தெற்கு நோக்கிச் செல்கின்றன; சில சமயத்தில் வடக்கு நோக்கி அனுப்பப்படுகின்றன. பலர் பலவிதமாக நினைக்கிறார்கள். கலவரத்தையும், பயத்தையும் உண்டாகுவது அச்சு நாடுகளுடைய சாதாரண வழக்கம். ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இந்த மூன்று அச்சு நாடுகளும் அவசியமான சந்தர்ப்பங்களில் சந்தேகப்படும்படியாக நடந்துகொள்ளும். அது அச்சுத் தந்திரங்களில் ஒன்றாகும்.

இப்போது ஜப்பானியப் பத்திரிகைகள் அமெரிக்காவைப்பற்றி இழிவாக எழுதுகின்றன; அமெரிக்க அரசாங்கத்தையும் அமெரிக்க நாட்டு மக்களையும் திட்டுகின்றன. ஏன் இப்படிச்செய்கின்றன? இதற்கு ஒரு காரணம் உண்டு. ஜப்பான் அமெரிக்காவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள ஆசைப்பட்டது. அந்த ஒப்பந்தம் தனக்கு சௌகரியமாயிருக்கவேண்டுமென்று ஜப்பான் விரும்பிற்று. இதற்கு அமெரிக்கா ஒப்பவில்லை. ஆகையால் ஒப்பந்தப் பேச்சு கைவிடப்பட்டது.

### ஜப்பான்—அமெரிக்கா பேச்சு.

ஜப்பான் அமெரிக்காவை ஒத்துக்கொள்ளும்படி கேட்ட விஷயம் என்ன? ஏன் அமெரிக்கா அதை மறுத்துவிட்டது? ஜப்பான் ஒரு "புதிய சமுதாயத் திட்டம்" ஏற்படுத்தப்போகிறதாம். அதாவது, மனித வாழ்க்கையின் போக்கையே அடியோடு மாற்றப்போகிறதாம். தூரக்கிழக்குப் பிரதேசத்தில், தன்னிஷ்டப்படி திட்டம் ஏற்படுத்துவதற்கு தனக்கு உரிமையிருக்கிறதென்றும், அந்த உரிமையை அமெரிக்கா அங்கீகரிக்கவேண்டுமென்றும், ஜப்பான் கேட்டது. சீனாவைக் கைப்பற்றி, சீன மக்களை அடிமையாக்கி, சீனப்பொருள்களை அபகரிக்க வேண்டுமென்பது ஜப்பானுடைய நோக்கம்.

இதே மாதிரியாக, ஐரோப்பாவில் ஜெர்மனி ஒரு "புதிய சமுதாயத் திட்டம்" ஏற்படுத்தப் போவதாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறது. ஜெர்மனியின் ஆட்சியின் கீழ் மற்ற நாடுகள் அடிமைகளைப் போல் இருக்கவேண்டும். ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் நடக்கும் அநியாயங்கள் கணக்கில்லாமல் இருக்கின்றன. நாட்டுமக்கள் ஜெர்மனியர்களின் வேலைக்காரர்களைப்போல நடத்தப்படுகிறார்கள். நாட்டின் மூலப்பொருள்களும், சுரங்கப்பொருள்களும் ஜெர்மனியால் கொள்ளையடிக்கப்படுகின்றன. இது தான் ஜெர்மனியின் "புதிய சமுதாயத் திட்டம்". இந்தத் திட்டத்தை ஜப்பான் பின்பற்ற ஆசைப்படுகிறது. சுதந்தரக் கொள்கையை உடைய அமெரிக்கா இதற்கு ஒப்புக்கொள்ளுமா? ஒருக்காலுமில்லை. இதனால் தான், ஜப்பான்—அமெரிக்க ஒப்பந்தப் பேச்சு முறிந்துபோய்விட்டது.

ஜப்பானுடைய அந்தரங்க நோக்கத்தை அமெரிக்காவும் பிரிட்டனும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கின்றன. சீனா, தாய்லாந்து, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், இவைகளை எல்லாம் தனக்கு அடிமை நாடுகளாக வைத்துக்கொள்ள வேண்டுமென்பது ஜப்பானுடைய பேராசை. இந்தப் பேராசை நிறைவேறுவது மிகவும் கஷ்டம். ஏனென்றால், இதை எதிர்த்து நான்கு நாடுகள் நிற்கின்றன. இதற்கு "ஏ.பி.சி.டி. பிரண்ட்" என்று பெயர். அமெரிக்கா, பிரிட்டன், சீனா, டச்சுக் கிழக்கிந்திய தீவுகள், இவைகள் நான்கும் ஜப்பானின் முயற்சியை ஒன்று சேர்ந்து எதிர்க்கின்றன. ஜப்பான் யுத்தத்தில் இறங்கினால், அதை எதிர்ப்பதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. சிங்கப்பூர், பிலிப்பைன் தீவுகள், ஆஸ்திரேலியா முதலியன யுத்தத்திற்குத் தயாராயிருக்கின்றன. தாய்லாந்து, நடு நிலைமை வகித்திருக்கிறது.

### நெருக்கடியான நிலைமை

தூரக் கிழக்குப் பிரதேசத்தில், நிலைமை மிகவும் நெருக்கடியாய் இருக்கிறது. இந்தியாவின் பிரதம தளகர்த்தரான ஜெனரல் வேவெல் திடீரென்று அங்கு சென்றிருக்கிறார். இருக்கிற நிலைமையைக் கவனித்து, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக அவர் போயிருக்கிறார். சில ஆஸ்திரேலிய அரசியல் நிபுணர்கள் நிலைமையின் நெருக்கடியைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவின் முதல் மந்திரியாகிய மிஸ்டர் கர்டின், பிரிட்டனையும், நேச நாடுகளையும், சுதந்தரத்துக்காகப் பாடுபடும் மக்களையும் ஆஸ்திரேலியா முழு மனதுடன் ஆதரிக்கும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார். ஆஸ்திரேலியாவை எதிர்க்கவேண்டும் என்று ஜெர்மனி ஜப்பானுக்கு ஜாடை காட்டியிருக்கிறது. ஆனால் ஆஸ்திரேலியா தகுந்த பாதுகாப்புடன் இருக்கிறது என்று ஜப்பானுக்குத் தெரியும்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகள் ஜப்பான் சம்பந்தமாக என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி பிரிட்டன் அவைகளுடன் கலந்து ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. ஜப்பான் என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி ஜெர்மனி தூண்டிக்கொண்டே இருக்கிறது. ஜப்பான் இப்போதிருக்கும் நிலைமையில் என்ன செய்வது என்று தெரியாமல் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

## உலகத்திலேயே மிகப் பெரிய பீரங்கி



**பிரிட்டனுடைய யுத்த தளவாடங்கள் அதிக விரைவாக அபிவிருத்தியடைந்து வருகின்றன. அவைகளில் ஒன்று மேலே காட்டப்பட்டிருக்கும் "போஷ ஃஸ்டர்" என்ற பீரங்கி. இது உலகத்திலேயே மிகப் பெரியது. இப்புதிய பிரிட்டிஷ் பீரங்கி முதல் முதலாகச்சுடும் போது, இந்த புகைப்படம் எடுக்கப்பட்டது.**

---

# வாரச் செய்திக் குறிப்புகள்

## 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் விமானப் போர்

ஜெர்மனியின் முக்கியமான இடங்களை, பிரிட்டிஷ் விமானப்படை அடிக்கடி தாக்கிக்கொண்டு வருகிறது. சென்ற வாரம், வழக்கம்போல, ஜெர்மனியின் சில பாகங்களில் வெடிகுண்டுகள் போடப்பட்டன. வடமேற்கு ஜெர்மனியில் கீல், பிரெஸ்ட், லுஹேவர் முதலிய முக்கியமான பட்டணங்கள் கடுமையாகத் தாக்கப்பட்டன. ஜெர்மனியின் தலைநகரமாகிய பர்லின்மேல் மழை பொழிந்தது போல, பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. பர்லினுடைய முக்கியமான ரயில்வே ஸ்டேஷன்களாகிய பாட்ஸ்டாமர், அன்ஹால்டர் என்பவைகள் பலமாகத் தாக்கப்பட்டன. பிரிட்டிஷ் விமானத் தாக்குதலினால் பர்லினில் ரயில்வே அமைப்பு நன்றாகக் கலைக்கப்பட்டதென்று தெரிகிறது. பர்லினில் உள்ள எடன், அட்லான் என்ற இரண்டு சிறந்த ஓட்டல்கள் ஒரே ராத்திரியில் பழுதாக்கப்பட்டன. ஒரு ரயில்வே ஸ்டேஷன் இதற்குமுன் வெடிகுண்டுகளால் சேதமாக்கப்பட்டிருந்தது. அதை ஜெர்மானியர்கள் 'ரிபேர்' செய்வதற்கு மூன்று வாரங்களாயிற்று. அதே ஸ்டேஷன் மறுபடியும் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது. பூமிக்கடியில் இருக்கும் ரயில்வே ஸ்டேஷன், ரிபேர் செய்யும் கடைகள், தொழிற்சாலைகள், ஒரு தபாலாபீஸ், சாமான்கள் சேர்த்துவைக்கும் ஒரு சாலை முதலியன பர்லின் நகரில் பிரிட்டிஷ் வெடிகுண்டுகளால் சேதமாக்கப்பட்டன.

பிரமென் என்ற ஜெர்மன் பட்டணத்தில் உள்ள ஒரு ஆகாய விமானங்கள் செய்யும் சாலையைப் பிரிட்டிஷ் விமானங்கள் பட்டப்பகலில் தாக்கி, அதிக சேதத்தை உண்டாக்கின. அரைகுறையாகக் கட்டப்பட்ட அநேக ஆகாய விமானங்கள் நாசமாய்விட்டன. 'சப்மரீன்'கள் (நீர்முழுகிக் கப்பல்கள்) செய்யும் கப்பற்சாலைகள் அநேக தடவை தாக்கப்பட்டதால், சப்மரீன் கட்டும் வேலைத் திட்டம் தாறுமாறாக்கப்பட்டது.

காசல் என்ற ஜெர்மன் ரயில்வே ஸ்டேஷன் கட்டடம் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. டிக்கட்டு கொடுக்கும் இடம் இடிந்து விழுந்துவிட்டது. அருகில் இருந்த இரண்டு கட்டடங்களும் இடிந்து விழுந்தன.

கலோன் என்ற பட்டணத்தில் இருந்த ஒரு பெரிய பலசாமான்கள் கடை அடியோடு நாசமாக்கப்பட்டது. மான்ஹீம் என்ற பட்டணத்தில் இரண்டு தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டன. ஸார், ரைன்லாந்து பிரதேசங்களும், டங்கர்க், நேபிள்ஸ் முதலிய இடங்களும் பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன.

பிரிட்டனின்மேல், சில ஜெர்மன் விமானங்கள் பறந்து வெடிகுண்டுகளைப் போட்டன. கிழக்கு ஸ்காட்

லாந்திலும், கிழக்கு ஆங்கிளியா பிரதேசத்திலும் வெடிகுண்டுகள் விழுந்தன.

ஜெர்மனியைப் பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கிக் கொண்டுவருவதால், அதிக நஷ்டமும், நாட்டுமக்களுக்குத் துன்பமும் உண்டாயிருக்கிறது. மழைக் காலம் நெருங்கிவிட்டது. கஷ்டமும் அதிகரிக்கிறது. பர்லின் மக்கள் படும் கஷ்டத்தைப்பற்றி, ஹிட்லரின் பிரசார மந்திரியான டாக்டர் கோப்பல்ஸ், குறிப்பிட்டிருக்கிறார். அவர் பர்லின் நகரவாசிகளுக்கு ஒரு ஆறுதல் கூறுகிறார். இதர பட்டணங்கள் இன்னும் கடுமையாக தாக்கப்பட்டிருக்கின்றன ; ஆகையால் பர்லின் நகரவாசிகள் அதிகமாக வருத்தப்பட வேண்டியதில்லை என்று அவர் தெரிவித்தார்.

பிரிட்டனில் ஒரு சேவாசங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் விமான ஓட்டிகள் விமானங்களிலிருந்து கடலில் விழுந்துவிட்டால் அவர்களைக்கண்டு பிடித்து அவர்களுக்குவேண்டிய சிகிச்சைசெய்வது இந்த சங்கத்தினுடைய வேலை. இதைப்பற்றிய சில விவரங்கள் கீழே தரப்படுகின்றன :—

பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்தவர்களும், மிக்க தேர்ச்சியும் அனுபவமும் பெற்றவர்களுமான 600 விமானிகள் சென்ற சில மாதங்களுக்குள் பிரிட்டனைச் சுற்றியுள்ள கடலிலிருந்து தப்புவிக்கப்பட்டார்கள். இவர்களின் சேவை பிரிட்டனுக்கு மிகவும் அத்தியாவசியமானது. இவர்கள் இப்பொழுது திரும்பவும் விமானப் படையில் சேவை புரிந்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் உயிர் தப்பியதற்கும், இவர்களின் சேவை பிரிட்டனுக்குக் கிடைத்ததற்கும் ஆகாய, கடல் ரக்ஷணிய சேவா சங்கத்தார் தான் காரணம். இவர்கள் பிரிட்டிஷார்களை மட்டுமல்ல, யுத்தத்தில் அடிபட்டுச் சமுத்திரத்தில் விழும் ஜெர்மானியரையும் காப்பாற்றுகிறார்கள். இவர்கள் பிரிட்டிஷ் விமானப் படையின் கடற்கரைப் பாதுகாப்புப் பகுதியுடனும் பிரிட்டிஷ் கப்பல் படையுடனும் ஒத்துழைக்கிறார்கள்.

இவர்களின் ரக்ஷணிய வேலை பெரும்பாலும் இங்கிலீஷ் கால்வாயிலும், வடகடலிலும் நடக்கிறது. சில சமயங்களில் விமானிகள் கடலில் விழுந்த பதினைந்து நிமிஷத்துக்குள் தப்புவிக்கப்படுகிறார்கள். ஆனால் சில சமயங்களில் சேவா சங்கத்தார் ஒரு பக்கம் தேடிக்கொண்டிருக்கையில் இன்னொரு பக்கம் விமானிகள் நாள் கணக்கில் சிறு படகுகளில் கஷ்டப்படுவதுண்டு. ஒரு சமயம் ஒரு வெடிவிமானத்தைச் சேர்ந்தவர்கள் ஐன்பது நாளைக்கு யாரும் காப்பாற்றுவாரின்றிக் கடலில் கிடந்து தவித்தார்கள்.

யுத்த விமானி தன் விமானத்தை விட்டுக் கீழே குதிக்கும் போது தன்னுடன்கூட ஒரே ஒரு ஆள் மட்டும் உட்காரக்கூடிய ஒரு படகு வைத்திருக்கிறான். இது 15 அங்குலம் நீளம், 14 அங்குலம் அகலம், 3 அங்குலம் உயரமுள்ள ஒரு சிறு பையில் அடைக்கப்பட்டிருக்கிறது. பறக்கும் சமயத்தில் விமானி இதை உட்காருவதற்கு மெத்தையாக உபயோகிக்கிறான். இதை அவனுடன் சேர்த்து கயிறு கொண்டு கட்டியிருப்பதால் இது காணமற் போவதற்கு இடமில்லை. விமானி தண்ணீரில் விழுந்தும், உள்ளே ஒரு புட்டியில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கரியமல வாயுவின் உதவியினால் இது விரிந்து ஒரு படகாகிறது. இந்த படகைச் செலுத்துவதற்குத் துருப்புகள், செய்தி அனுப்ப உதவும் கருவிகள், படகு வெகுதூரம் அடித்துக்கொண்டு போய்விடாமல் இருப்பதற்காக நங்கூரம் ஆகியவை, படகிலேயே இருக்கின்றன.

வெடி விமானங்களுடன் இணைக்கப்பட்டிருக்கும் படகுகள், விமானத்தில் உள்ள எல்லாரையும் தாங்கும்படி அவ்வளவு பெரியதாயிருக்கும். சில படகுகள் விமானம் கடலில் பட்டதும் தாங்களாகவே விரிய ஆரம்பிக்கின்றன. சில சமயம் விமானிகள் தாங்களே படகை எடுத்து வெளியில் போடுகிறார்கள்; அது விரிய ஆரம்பிக்கிறது. இதற்கெல்லாம் சில வினாடிகளே பிடிக்கின்றன. இதற்குப் பிறகு விமானிகள் படகில் உட்கார்ந்துகொண்டு மேலே என்ன நடக்கப்போகிறது என்று காத்துக்கொண்டிருப்பார்கள்.

இதற்கிடையில் ஆகாய கடல் ரக்ஷணிய சேவா சங்கத்தார் விரைவாகத் தங்கள் வேலையைத் தொடங்குகிறார்கள். பிரிட்டிஷ் விமானப்படைக்கும் பிரிட்டிஷ் கடற் படைக்கும் உடனே செய்தி அனுப்பப்படுகிறது. ஆகாய, கடல் ரக்ஷணிய வேலைக்கென்றே தயாராக வைக்கப்பட்டிருக்கும் விமானங்கள் உடனே பறந்து சென்று படகுகளையும், சாப்பாட்டு வகைகளையும், குடி தண்ணீரையும், வெல்லச் சாராயத்தையும் கீழே கடலில் இருக்கும் விமானிகளை நோக்கிப் போடுகின்றன. இந்த விமானங்கள் கீழே படகைக் கண்டதும், அதைப் பார்த்துக்கொண்டு அங்கேயே இருக்க வேண்டும் என்பது கட்டளை. ஆகவே இந்த விமானங்கள் அங்கேயே சுற்றிச்சுற்றி வந்துகொண்டு ரேடியோ மூலம் படகு இருக்கும் இடத்தை ரக்ஷணிய சேவா சங்கத்தாருக்குத் தெரிவித்துக்கொண்டேயிருக்கும் படகுகளில் இருக்கிறவர்கள் காப்பாற்றப்பட்ட பிறகோ அல்லது போகலாம் என்று உத்தரவு கிடைத்த பிறகோ தான் இந்த விமானங்கள் அந்த இடத்தைவிட்டு போகும். இதே சமயம் கடலில் தத்தளித்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு மிகச் சமீபமாயுள்ள தளத்திலிருந்து ஒரு ரக்ஷண்யப் படகு புறப்படுகிறது. முக்கால் வாசி ரக்ஷணிய வேலையைக் கடற்படை தான் செய்கிறது. இப்படியாக ஒவ்வொரு நாளும் அநேகர் காப்பாற்றப்படுகிறார்கள். அவர்களுடைய தொகை அதிகரித்துக்கொண்டே போகிறது. இந்த ரக்ஷணிய சேவா சங்கம் ஆரம்பித்துக் கொஞ்ச காலம் தான் ஆகிறது. ஆனால் இதற்குள் அந்த சங்கம் மிக அருமையான வேலை செய்திருக்கிறது.

## 2. இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல்

அபிசீனியாவில் சில்லரைச் சண்டைகள் நடந்து கொண்டிருக்கின்றன. கோண்டார் என்ற இடத்துக்கு வட கிழக்கில், தாரு, லாரி என்ற இரண்டு மலைகளிலிருந்து எதிரிகள் தாக்கினார்கள். உள்நாட்டு எதிரித் துருப்புகள் குல்கிபார் என்ற இடத்திலிருந்து தாக்கின. அவைகளைப் பிரிட்டிஷ் துருப்புகள் விரட்டியடித்துத் துரத்திவிட்டன.

வடக்கு ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் விமானங்கள் எதிரிகளின் பட்டணங்களைப் பலமாகத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. பென்காசி பட்டணம் அதிகக் கடுமையாகத் தாக்கப்பட்டது. அதனால் ஏராளமான சேதம் உண்டாக்கப்பட்டது. தார்னு என்ற இடத்திலுள்ள துறைமுகமும், ஆகாய விமானச் சாலையும் தாக்கப்பட்டன.

இத்தாலியின் கடற்கரைப் பட்டணமாகிய நேபிள்ஸ் பிரிட்டிஷ் விமானங்களால் பலமாகத் தாக்கப்பட்டது.

மத்தியதரைக் கடலில், இத்தாலிய வர்த்தகக் கப்பல்கள் பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன. ஒரு கப்பல் ஆறு தடவை வெடி குண்டுகளால் தாக்கப்பட்டது. வர்த்தகக் கப்பல்களுக்குத் துணையாக வந்த ஒரு எதிரி யுத்தக் கப்பல் முழுகடிக்கப்பட்டது.

## 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

அமெரிக்கக் கப்பல்களை ஜெர்மன் நீர்முழுகிக்கப்பல்கள் அடிக்கடி தாக்கிக்கொண்டுவருகின்றன. இம்மாதிரி தாக்கி முழுகடிக்கப்பட்ட "ராபின்மூர்" என்ற கப்பலுக்காக 30 லட்சம் டாலர்கள் நஷ்டஈடாகக் கொடுக்கவேண்டுமென்று அமெரிக்கா ஜெர்மனியைக் கேட்டிருக்கிறது. சென்ற வாரம் அமெரிக்க எண்ணெய்க் கப்பலாகிய "சாலினாஸ்" ஜெர்மன் நீர்க்குண்டுகளால் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது. முழுகடிக்கப்பட்ட அமெரிக்கக் கப்பலாகிய "ஹூயன் ஜேம்ஸி" லிருந்து ஆபீசர்களும், மாலுமிகளும் எங்கிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் இறந்து போய்விட்டார்கள் என்று கருதப்படுகிறது.

அமெரிக்க யுத்தக் கப்பல்கள் அட்லாண்டிக் கடலிலுள்ள ஜெர்மன் சப்மரீன்களை அழிப்பதற்கு மும்முரமாக வேலை செய்கின்றன. சில ஜெர்மன் சப்மரீன்கள் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டன.

## 4. ரஷ்யாவும், பின்லாந்தும்.

மாஸ்கோவைப் பிடிப்பதற்காக ஜெர்மன் துருப்புகள் கடுமையாகப் போரிடுகின்றன. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளிலிருந்து 'ரிசர்வ்' துருப்புகள் கொண்டுவந்தபோதிலும் ஜெர்மானியர்களால் முன்னேற முடியவில்லை என்று மிஸ்டர் லசோவ்ஸ்கி,

ரஷ்யாவின் சமாச்சார ஸ்தாபனத் தலைவர் கூறுகிறார்.

கிரைமியாவுக்கு ஆபத்து வந்துவிட்டதென்று ,, ரெட் ஸ்டார் " என்ற ரஷ்யப் பத்திரிகை கூறுகிறது. ஜெர்மானியர்கள் இந்தப் பகுதியில் முன்னேறிச் செல்கிறார்கள்.

பின்லாந்து ரஷ்யாவுடன் சமாதானம் செய்துகொள்ளவேண்டுமென்று அமெரிக்கா கேட்டிருந்தது. அமெரிக்காவின் வேண்டுகோளை பின்லாந்து மறுத்துவிடும் என்று தெரிகிறது.

### ரஷ்ய உதவி.

மிஸஸ் சர்ச்சில் (பிரிட்டிஷ் முதல் மந்திரியின் மனைவி) "ரஷ்ய உதவி நிதி"க்கு தலைவராயிருக்கிறார். அந்த நிதிக்கு பிரிட்டிஷ் அரசர், ராணி எலிசபெத், மேரி ராணி ஆகிய எல்லாரும் நன்கொடை அனுப்பியிருக்கிறார்கள். மன்னர் தம்பதிகள் 1,000 பவுன் அனுப்பியிருக்கிறார்கள். மேரி ராணி 200 பவுன் அனுப்பியுள்ளார். இந்த நிதிக்கு இதுவரை 1,39,388 பவுன் வசூலாகியிருக்கிறது.

### ருமேனியர்களின் வீண் பெருமை.

ரஷ்யாவின் தென்மேற்கில் ஒடெஸா என்ற துறைமுகப்பட்டணம் இருக்கிறது. அதை, ருமேனியர்கள் பிடித்துவிட்டதாக வீண் பெருமை அடித்துக் கொள்ளுகிறார்கள். ரஷ்யர்கள் வேண்டுமென்றே ஒடெஸ்ஸாவைக் காலி செய்துவிட்டார்கள். இதனுடைய உண்மையான விவரங்கள் கீழே தரப்படுகின்றன :—

ஒடெஸ்ஸாவைக் காலி செய்துவிட்டதாக அக்டோபர் மீ 17உயன்று ரஷ்யர்கள் அறிவித்தார்கள். இந்த வேலை எட்டு நாளாக ருமேனியர்களின் கண்ணெதிரிலேயே அவர்களுக்குத் தெரியாமல் நடந்தது. ருமேனியர்கள் பலத்த நஷ்டமடைந்து விட்டதால் போர் புரிவதற்கே அவர்களுக்கு இஷ்டமில்லை. பல்கேரியரிடமிருந்து வருமென்று எதிர்பார்த்த உதவி வரவில்லை. இந்த காரணங்களால், ருமேனியப் படைகளின் தளபதியான ஜெனரல் கியூபெர்டீ என்பவர் உத்தரவுப்படி அந்த நகரத்தைத் தாக்கிப் பிடிக்க முடியாமல் தயங்கிக்கொண்டிருந்தார்.

ஒடெஸ்ஸாவின் பண்டகசாலைகள் முதலியவற்றை எல்லாம் ரஷ்யர்கள் கொளுத்திவிட்டார்கள். சேமிப்பு இடங்களெல்லாம் வெடிபோட்டு வெடிக்கப்பட்டன. ஒடெஸ்ஸா நகரம் நெருப்புப் பற்றி எரிய ஆரம்பித்தது. அப்போதுதான் ஏதோ நடந்துவிட்டதுபோலிருக்கிறதென்று ருமேனியர்கள் உணர ஆரம்பித்தார்கள். ஒடெஸ்ஸாவின் வெளிப்புறப் பாதுகாப்பு அரண்களை மெதுவாக நெருங்கினார்கள். தங்களை யாரும் எதிர்ப்பவர்களில்லை என்று கண்டவுடன் ருமேனியர்கள், ரஷ்யர்கள் ஒடெஸ்ஸாவைக் காலி செய்துவிட்டதாகத் தலைமைஸ்தானத்துக்குச் செய்தி யனுப்பினார்கள். பிறகு அவர்கள் காலியாய் எரிந்துகொண்டு இருந்த நகரத்துக்குள் பிரவேசித்தார்கள். இதுதான் ருமேனியர்கள் ஒடெஸ்ஸாவைக் "கைப்பற்றியதின்" உண்மையான விவரம். ஒடெஸ்ஸாவிலுள்ள துருப்புகள், யுத்த தளவாடங்கள் பத்திரமாக செபாஸ்டபோலுக்குக் கொண்டுபோகப்பட்டன. ஒரு பெரிய பிரயாணக் கப்பற்படையும் ஒன்பது பிரிவுக்கு மேற்பட்ட ரஷ்யப் பட்டாளங்களும், கருங்கடலைத் தாண்டி செபாஸ்டபோலுக்குப்போய்ச் சேர்ந்தன.

### அமெரிக்க விமான உதவி.

அமெரிக்காவிலிருந்து ரஷ்யாவுக்கு வெடி குண்டு விமானங்கள் வருகின்றன. கானடா, அலாஸ்கா இவைகளின் வழியாக இந்த விமானங்கள் இப்பொழுது மாஸ்கோவுக்குச் சென்று கொண்டிருக்கின்றன. பாதையில் உள்ள காட்டுப் பிரதேசத்தில் நான்கு ஆகாய விமான நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. ரஷ்யாவுக்குச் செல்லும் அமெரிக்க விமானங்கள் முதலில் பிரிட்டனுக்கு குத்தகை-கடன் திட்டத்தின் கீழ் அனுப்ப உத்தேசித்திருந்தவை. அமெரிக்காவில் துப்பாக்கிகள், துப்பாக்கி மருந்துகள், இன்னும் இதர யுத்த தளவாடங்கள் வாங்கிக்கொள்வதற்காக ரஷ்யாவுக்கு 17 லட்சம் பவுனுக்கு மேல் அமெரிக்கா கடன் கொடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. இதுவரைக்கும் சுமார் $3\frac{1}{2}$ கோடி பவுன் அமெரிக்கா ரஷ்யாவுக்குக் கடன் கொடுத்திருக்கிறது.

### மாஸ்கோ மக்களின் மன உறுதி.

மாஸ்கோவைப் பிடிப்பதற்காக இன்னும் சண்டை நடக்கிறது. மாஸ்கோ மக்கள் மன உறுதியுடன் காணப்படுகிறார்கள். நகரத்துக்கும் யுத்த எல்லைக்கும் நடுவில் உள்ள எல்லாப் பயிர் பச்சைகளும் கொளுத்தப்பட்டு இருக்கின்றன. மாஸ்கோவில் உள்ள பாலங்கள், தெருக்கள், முக்கியமான கட்டடங்கள், எல்லாவற்றிலும் வெடிகள் வைக்கப்பட்டுள்ளன. எப்பொழுதாவது ஜெர்மானியர் நகரத்தைப் பிடிக்கும் பட்சத்தில், இந்த வெடிகளுக்கு நெருப்பு வைத்து விடுவார்கள். முக்கியமான இடங்களெல்லாம் ஜெர்மானியர்கள் கையில் அகப்படுவதற்கு முன் நாசமாக்கப்படும்.

இப்போது நடக்கும் யுத்தத்தினால், ரஷ்யாவின் தொழிற்சாலைகளுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ரஷ்யாவின் தொழிற்சாலைகள் எல்லாம் யுத்தத்துக்கு உதவாமல் போய்விட்டன என்று சொல்ல முடியாது. மத்திய, கீழ் வால்கா பிரதேசத்தில் சென்ற ஐந்து வருஷங்களாக தொழிற்சாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இந்த பிரதேசத்தில் உள்ள நகரங்களில் மக்களின் தொகை இரண்டு மடங்கும், மூன்று மடங்குமாக அதிகப்பட்டிருக்கிறது. மோட்டார்கள், லாரிகள், விவசாய டிராக்டர்கள் முதலியன இங்குள்ள தொழிற்சாலைகளால் செய்யப்படுகின்றன. வேண்டிய காலத்தில் டிராக்டர்கள் செய்வதை விட்டுவிட்டு டாங்கிகள் செய்ய வேண்டியதற்காக இத்தொழிற்சாலைகளில் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆறு வருஷங்களுக்குமுன்னால ஸ்டாலின்கிராடில் உள்ள தொழிற்சாலை ஒன்று மாத்திரம் 38,000 டிராக்டர்கள் வீதம் உற்பத்தி செய்தது. லாரிகளும், மோட்டார்களும் உற்பத்தி செய்யும் கார்க்கி தொழிற்சாலையில் வருஷத்துக்கு 3 லட்சம் வண்டிகள் செய்ய முடியும்.

### பெட்ரோல் எண்ணெய் வயல்கள்.

இதே பிரதேசத்தில், இன்னும் சற்றுக் கிழக்கேயும் வடக்கேயும் பெரிய எண்ணெய் வயல்கள் இருக்கின்றன. புகழ் பெற்ற காகேசிய பெட்ரோல் எண்ணெய்-வயல்களில் கிடைப்பதை விட இங்கு அதிகமாக எண்ணெய் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. "இரண்டாவது பாகு" என்று கூறப்படும் இந்தப் பிரதேசத்தில் 1939-ல் 20 லட்சம் டன் எண்ணெய், அதாவது அந்த வருஷ ரஷ்ய எண்ணெய் மொத்த உற்பத்தியில் நூற்றுக்கு 6·4 வீதம் உற்பத்தியாயிற்று. ஆனால் 1924-ம் வருஷம் 70 லட்சம் டன் எண்ணெய் உற்பத்திக்குத் திட்டம் போடப்பட்டது. ஆகவே இந்த உற்பத்தி அளவு இப்பொழுது அடைந்திருக்கவேண்டும் என்று நாம் கொள்ளலாம்.

இந்த தொழிற்சாலைப் பிரதேசங்கள் எல்லாம் மாஸ்கோவுக்குக் கிழக்கே 500 மைலுக்கு அப்பால் இருக்கின்றன. 'இரண்டாவது பாகு' அதற்கப்பால் 250 மைல் கிழக்கே தள்ளி இருக்கிறது. இதற்கு இன்னும் கிழக்கேயும் தெற்கேயும் சுரங்கப் பொருள்கள் நிறையக் கிடைக்கின்றன. மத்திய ஆசியாவில் தான் ஈயம், தாமிரம், நிக்கல், துத்தநாகம் இவை அதிகமாகக் கிடைக்கின்றன. நிலக்கரிப் பிரதேசங்களும்எண்ணெய்பிரதேசங்களும் இங்கு இருக்கின்றன.

### கைகூடாத நோக்கம்

ரஷ்யத் தொழிற் சாலைகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டதைப் பற்றியும், ஜெர்மானியர்களின் முக்கிய நோக்கம் கைகூடாததைப் பற்றியும், ரஷ்ய ராணுவத் தலைமைப் பதவி மாறியதினால் ஜெர்மனிக்கு உண்டான கலக்கத்தைப் பற்றியும், மிஸ்டர் பிலிப் ஜார்டன் என்பவர் எழுதியிருக்கிறார். ரஷ்யாவில் அவர் " நியூஸ் க்ரானிக்கள் " பத்திரிகையின் நிருபர். அவர் எழுதியதின் சாராம்சம் கீழே தரப்படுகிறது :—

வாரா வாரம் நடக்கும் விஷயங்களைக் கவனித்தால், ரஷ்யர்கள் மிகப் பலமான தாக்குதலை மிக அற்புதமாகத் தாங்கி வந்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். முக்கியமாக ஜெர்மானியரின் உண்மையான நோக்கத்தை நிறைவேறுதபடி செய்திருப்பது ஒரு பெரிய விசேஷம். குளிர்காலத்தில் தங்குவதற்கு மாஸ்கோவை உபயோகிப்பது அல்லது டான் தீரத்திலுள்ள தொழிற் சாலைகளை உபயோகிப்பது—இது ஜெர்மானியரின் முக்கிய நோக்கமல்ல ; ரஷ்யப் பட்டாளங்களை அடியோடு அழித்து ஒழித்து விடவேண்டும் என்பதுதான் ஜெர்மனியின் பிரதம நோக்கம். இந்த நோக்கம் கைகூடவில்லை.

புதிய பட்டாளங்களை அமைக்கும்படி மார்ஷல் வாரோஷிலோவும், மார்ஷல் புடியானியும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தச் செய்தி ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுக்கு கலகத்தை உண்டாக்கியிருக்கவேண்டும். ரஷ்யப் பட்டாளங்களை அழித்துவிட்டதாக ஜெர்மானியர்கள் அடிக்கடி பிரசாரம் செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் பழைய பட்டாளங்கள் அழிக்கப்படவில்லை. அவைகள் தான் ஜெர்மானியர்களை எதிர்த்து, மாஸ்கோவை நெருங்காதபடி போர் புரிந்து வருகின்றன. இது ஒரு பக்கமிருக்க மற்றொரு பக்கத்தில், புதிய பட்டாளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதனோடு இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். ரஷ்யாவின் பெரிய பெரிய தொழில் நிலையங்கள் எல்லாம் நாடெங்கும் பல பாகங்களில் ரகசியமான இடங்களில் சிதறிக் கிடக்கின்றன. இந்தத் தொழில் நிலையங்களின் உற்பத்தி சக்தி அந்நிய நாட்டிலுள்ளவர் ஒருவருக்கும் தெரியாது. இந்த நிலையங்கள் இப்போது ஜெர்மானியரை விரட்டியடிப்பதற்காக இரவு பகலாய் வேலை செய்து வருகின்றன.

### தொழிற்சாலைகள் "பிரயாணம்"

சமீபத்தில் ரஷ்யாவைச் சுற்றிப் பார்த்தபோது ஒரு ஆச்சரியமான காட்சி காணப்பட்டது. மேற்குப் பிரதேசங்களில் இருந்த தொழிற்சாலைத் தளவாடங்கள் ஒன்றின் பின் ஒன்றாக நீளமான ரயில் வண்டிகளில் கீழ் திசையை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. இந்த தொழிற்சாலை யந்திரங்களை அமைப்பதற்காக முன்னமேயே, கீழ் திசையில் இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு தயாராய் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாளும், ஜெர்மன் துருப்புகளால் உண்டாக்கப்பட்ட நஷ்டத்துக்கு ரஷ்யா ஈடு செய்து கொண்டு வருகிறது. இந்தப் போரின் முடிவு சுதந்தர மக்களெல்லாம் விரும்புவது போலத்தான் இருக்கும் என்ற திடமான நம்பிக்கைக்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

## 5. பால்கன்ஸ், துருக்கி முதலியன

பால்கன் தீபகற்பத்தில் உள்ள கிரீஸ் தேசம் யுத்தத்தில் தோல்வியுற்றதைப்பற்றி கிரேக்க அரசர் ஜார்ஜ், லண்டனில் ஒரு பிரசங்கத்தில் குறிப்பிட்டார். ஜெர்மனி மாத்திரம் தலையிடாமல் இருந்தால், தங்களோடு போராடிக்கொண்டிருந்த இத்தாலியர்களை கடலுக்குள் கிரேக்கத் துருப்புகள் விரட்டியடித்திருக்கும் என்று அவர் கூறினார். மற்றொரு பால்கன் நாடாகிய பல்கேரியா 1917-ம் வருஷம் துரோகம் செய்ததுபோல, 1941-ம் வருஷமும் துரோகம் செய்து, கிரீசை தோல்வியடையும்படி செய்துவிட்டது. ஆனால் முடிவில் வெற்றி நமக்குத்தான் வரும் என்பதை நம்பிக்கையுடன் நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று கிரேக்க அரசர் கூறினார்.

நியூயார்க்கில் நடந்த அகில தேசீய தொழிலாளர் மகாநாட்டுக்கு, செக்கோஸ்லவாக்கியா, கிரீஸ், போலந்து, யூகோஸ்லாவியா முதலிய நாடுகளின் பிரதிநிதிகள் சென்றிருந்தார்கள். அவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில், குடியரசு கொள்கைதான் கடைசியில் வெற்றிபெறுமென்றும், மத்திய ஐரோப்பாவில் உள்ள அடிமை நாடுகள் விடுதலையடையுமென்றும் கூறியிருக்கிறார்கள்.

## 6. கப்பல் நிலைமை

சென்ற வாரத்தில், நேசதேசத்தார்களின் கப்பல் நஷ்டத்தைப்பற்றி சில விவரங்கள் வெளியிடப்பட்டன. சென்ற 12 மாதங்களில், மாதம் ஒன்றுக்கு சராசரி 3¾ லட்சம் டன் கப்பல் நஷ்டமாயிற்று. ஆனால் 1917-ம் வருஷத்தில் 4¾ லட்சம் டனுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது. சென்ற சில மாதங்களாக, நேச தேசத்தாரின் கப்பல் நஷ்டம் குறைந்து கொண்டு வருகிறது. அமெரிக்கா ஐஸ்லாந்தில் பிரவேசித்த பிறகு, கப்பல் நஷ்டம் குறைந்திருக்கிறது. ஜெர்மனி எந்த அளவில் கப்பல்களை முழுகடிக்கிறதோ, அதைவிட மூன்று மடங்கு அமெரிக்கா கப்பல்களைத் தயார்செய்துகொண்டுவருகிறது.

## 7. தூரக் கிழக்கு அரங்கம்

சிங்கப்பூரில் நடந்த பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில், தூரக் கிழக்கு அரங்கத்தில் உள்ள நிலைமையைப் பற்றி, இந்தியாவின் பிரதம தளகர்த்தர், ஜெனரல் வேவெல் விளக்கிக் கூறியிருக்கிறார். தூரக் கிழக்கு அரங்கம் இந்தியாவின் வலது கைப் பக்கத்தில் உள்ளது. அங்கு எது நடந்தாலும், இந்தியாவைப் பாதிக்கும்படியிருப்பதால், இந்தியா முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகளுடன் இருக்கிறது என்று அவர் சொன்னார். வட மேற்கு எல்லைப்புறம் பலப்படுத்தப்பட்டிருக்கிறதென்றும், ஏராளமான துருப்புகள் தூரக் கிழக்கு அரங்கத்துக்கு போய்க்கொண்டிருக்கின்றனவென்றும் அவர் அறிவித்தார்.

ஜப்பானுடைய தற்போதைய நிலைமை இந்த இதழில் வெளியிடப்பட்டிருக்கும் வேறொரு கட்டுரையில் விவரமாக விளக்கப்பட்டிருக்கிறது.

## 8. விஷி

35 பிரெஞ்சுக் கப்பல்களை பிரிட்டிஷ் கப்பல்கள் பல வழிகளில் தடுத்திருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. விஷியின் கப்பல்கள் திருட்டுத் தனமாக ஜெர்மனிக்கு வேண்டிய சாமான்களைக் கொண்டு போய்க்கொண்டிருந்தபடியால், அவைகள் கைப்பற்றப்பட்டன. பிரான்சு தேச முழுவதும் பொருளாதார முற்றுகையின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று பிரட்டிஷ் பத்திரிகைகள் கிளர்ச்சி செய்கின்றன.

பிணையாகக் கொள்ளப்பட்ட பிரெஞ்சுக்காரர்களை ஜெர்மானியர்கள் சுட்டுக் கொன்றுவிட்ட காரணத்தால், பிரான்சு முழுவதும் ஜெர்மனிக்கு விரோதமான உணர்ச்சியுடன் இருக்கிறது.

## 9. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்

யூகோஸ்லாவியாவில், 100 பொதுவுடைமைக் கட்சிக்காரர்களும், யூதர்களும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இந்த அக்கிரமம் யூகோஸ்லாவியாவின் தலைநகராகிய பெல்கிரேடில் நடந்தது. இவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? யாரோ சிலர் ஒரு ஜெர்மன் சிப்பாயைத் தாக்கினார்களாம். அதற்காக பழிக்குப் பழி வாங்குவதற்கு 100 பேர் ஜெர்மானியர்களால் கொலை செய்யப்பட்டார்கள். இதற்கு முன் பொதுவுடைமைக்காரர்கள் அரசாங்கத் துருப்புகளுடன் சண்டை செய்தார்கள். இந்தச் சண்டையில் 40 பொதுவுடைமைக்காரர்கள் கொல்லப்பட்டார்கள்; 40 பேர் காயமடைந்தார்கள்.

ருமேனியாவில் 14 பொதுவுடைமைக்காரர்களுக்கு ஜெர்மானியர்களால் கொலைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர்கள் அரசாங்கக் கட்டடங்களையும், ரயில்வேகளையும் நாசம் செய்ய முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டார்கள்.

## 10. நடுநிலைமை நாடுகள்

ஆப்கனிஸ்தான் ஒரு நடுநிலைமை நாடு. அதை கைப்பற்றவேண்டுமென்ற எண்ணமோ, அல்லது அதனுடைய பிரதேசங்களில் ஒரு பாகத்தைப் பிடிக்கவேண்டுமென்ற எண்ணமோ ரஷ்யாவுக்குக் கிடையாது என்று மிஸ்டர் லசோவ்ஸ்கி, ரஷ்யாவின் சார்பாக, தெரிவித்தார். ஆப்கனிஸ்தானத்தில் ஜெர்மானியர்களும், இத்தாலியர்களும் ரஷ்யாவுக்கு எதிராக சூழ்ச்சிசெய்து வந்தார்கள். அவர்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று ரஷ்யா ஆப்கன் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டது. அதன்படியே, அரசாங்கம் அவர்களை அப்புறப்படுத்திவிட்டது. இதனால் ரஷ்யாவும் ஆப்கனிஸ்தானமும் நேசநாடுகளாக இருப்பது நன்றாகத் தெரியவரும் என்று மிஸ்டர் லசோவ்ஸ்கி கூறினார்.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றன்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் ஆபீசர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.